# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

## 2004-2005

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை - 2004-2005

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 2004-2005
## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் | 1-4 |
| 2 | நேரடித் தேர்வுகள் | 4-5 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை | 5 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன | 5 - 8 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 8 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 9 - 14 |
| | **பின் இணைப்புகள்** | |
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 16 |
| 2 | நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம் | 17 |
| 3 | வருவாய் மற்றும் செலவு | 18 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 19 |
| 5 | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம் | 19-20 |
| 6 | பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம் | 21 |
| 7 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் | 21-23 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் | 24-25 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம் | 26-27 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் | 28 |
| 11 | 1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் | 29-32 |
| 12 | அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் | 32 |
| 13 | வரைபடங்கள் | 33-34 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2004-2005

முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினொன்று என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பத்து உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| திரு. வ. அழகுசுந்தரம், எம்.எஸ்.ஸி.,<br>(23.11.2004 பி.ப. ஓய்வு பெற்றார்) | உறுப்பினர். |
| டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ.,பி.எல்.,<br>(19.10.2004 பி.ப. ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,<br>(16.06.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,<br>(16.06.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,<br>(16.06.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திரு. பா.ர. சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்.,<br>(25.08.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,<br>(25.08.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,<br>(23.08.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,<br>(25.08.2004 அன்று பதவி ஏற்றார்). | உறுப்பினர் |
| டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,<br>(10.12.2004 அன்று பதவி ஏற்றார்) | உறுப்பினர் |
| | |
| டாக்டர் ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப.,<br>(02.07.2004 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்) | செயலாளர் |
| திரு. ந. தனம் ஜெயன்., இ.ஆ.ப.,<br>(02.07.2004 பி.ப. பணியேற்றார் மேலும் 24.12.2004 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்) | செயலாளர் |
| திருமதி. சந்தியா வேணுகோபால் -சர்மா, இ.ஆ.ப | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |

மார்ச் 31, 2005இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி-1

## செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும. அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

## வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடித் தேர்வு

1. முதல் நிலைத் தேர்வு -ஏதுமில்லை -

2. முதன்மை எழுத்துத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 3 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 55 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 5,539 |

3. நேர்முகத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 7 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 202 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 454 |

4. இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

| | | |
|---|---|---|
| முடிவு செய்த தெரிவுகளின் எண்ணிக்கை | : | 7 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 202 |
| தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 201 |

## II. இதர தேர்வு விவரங்கள்:

1. துறைத் தேர்வு

| | | மே 2004 | டிசம்பர் 2004 |
|---|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 55,122 | 47,968 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 20,613 | 13,555 |

2. அரையாண்டுத் தேர்வு

2004 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 46

2005 ஆம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 32

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 40 நேர்வுகள்.

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 1235 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் : 99 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துகளை தெரிவித்த வழக்குகள் : 467 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 882 நேர்வுகள்.:

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு | 30,89 |
| செலவு | 8,55,55 |

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. **அறிவிக்கைகள் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 2 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 2 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 37, விண்ணப்பித்தவர்கள் 4,319 ஆகும். வெளியிடப்பட்ட 2 பதவிகளுக்கான அறிவிக்கைப் பட்டியல், 37 காலியிடங்களின் எண்ணிக்கையுடன் உள்ள விவரங்கள் பின் இணைப்பு - 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. **சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :**

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

# பகுதி-2

## நேரடித் தெரிவுகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 55 காலியிடங்களுக்கான 3 தெரிவுகளில் முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 5539 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 202 காலியிடங்கள் அடங்கிய 7 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. 454 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். தேர்வாணையம் இறுதியாக 7 தெரிவுகளுக்கு முடிவினை அறிவித்தது. 202 காலியிடங்களுக்கு இறுதியாக 201 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 7 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### அறிக்கைக்குரிய ஆண்டில் தெரிவு முடிக்கப்பட்ட சில முக்கியப் பதவிகளின் விவரம்

| வரிசை எண் (1) | பதவியின் பெயர் (2) | காலியிடங்களின் எண்ணிக்கை (3) | தெரிவு செய்யப்பட்ட நபர்கள் (4) |
|---|---|---|---|
| 1 | தொகுதி - I பணிகள் | 91 | 91 |
| 2 | உதவி பல் மருத்துவர் | 15 | 15 |
| 3 | உதவி மருத்துவ அலவலர் (சித்தா/ ஆயுர்வேதா) | 59 | 58 |
| 4 | உந்தூர்தி ஆய்வாளர் நிலை -II | 20 | 20 |

# தொகுதிப் பணிகள்

## தொகுதி ஒன்று பணிகள்

(அ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 99 காலியிடங்களுக்கு 27.12.2000 அன்று விளம்பரப்படுத்தியது. 1,06,650 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதனிலைத் தேர்வு 10.06.2001 அன்று நடைபெற்றது. முதன்மை எழுத்துத் தேர்வு 09.02.2002 முதல் 13.03.2002 வரை நடைபெற்றது. வாய்மொழித் தேர்வு 21.06.2004 முதல் 24.06.2004 வரை நடைபெற்றது. இறுதியாக 91 விண்ணபதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ( எட்டு காலியிடங்கள் அரசால் குறைக்கப்பட்டன)

முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 55 காலியிடங்களை நிரப்புவதற்கு 3 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 5,539 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வாய்மொழித் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 202 காலியிடங்களை நிரப்ப 7 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. நடப்பு ஆண்டில் 12 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 5 குழுமங்கள் முற்பகலும் மற்றும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 74 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 454 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விவரங்கள் பின் இணைப்பு -5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி-3

### தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள் :

- ஏதுமில்லை -

## பகுதி -4

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :

 அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 20பணிகளில் 1235 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:

| | | |
|---|---|---|
| அ. I. | செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 2004-ல் நிலுவையில் இருந்த 64 வழக்குகள் உட்பட) | 1010 |
| II (i) | தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் | 559 |
| (ii) | தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் | 27 |
| (iii) | உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. | 22 |

(iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் 402

III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் 16

ஆ. I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் 467

II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் 203

III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் 264

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

| | | | |
|---|---|---|---|
| 1) | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 203 | |
| | | மாதம் | நாட்கள் |
| 2) | குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 | 01 |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 02 | 00 |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 12 | 00 |
| | எடுத்துக் கொண்ட மொத்த சராசரிக் காலம் | 24 | 01 |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 467 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு -8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 882 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

| வரிசை எண் (1) | பணி வகை (2) | இசைவு அளிக்கப்பட்டவை (3) | இசைவு மறுக்கப்பட்டவை (4) |
|---|---|---|---|
| 1. | மாநிலப் பணி | 9 | - |
| 2. | சார்நிலைப் பணி | 2 | - |
| 3. | அமைச்சுப்பணி | 871 | - |
| | கூடுதல் | 882 | - |

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 5 நபர்களை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. 15 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கும் மேல் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| காலம் (1) | மாநிலப் பணிகள் (2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3) | மாநிலப் பணிகள் (4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | 1 | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | 1 | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | 3 | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | 15 | - | - |
| கூடுதல் | - | 20 | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனம் தொடரத் தேர்வாணையம் 15 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரம் துறை வாரியாக பின் இணைப்பு- 10ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 99 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:

அரசால் 72 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 71 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 1 நேர்வில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அது தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு 320 (3)-ன் படி தேர்வாணையத்தினை கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளது.

7. விதி தளர்த்துதல்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 40 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

## பகுதி -5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

### 1) துறைத் தேர்வுகள்

2004-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 257பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,03,080 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ.எண். | விவரம் | மே - 2004 | டிசம்பர்-2004 |
|---|---|---|---|
| 1. | மொத்தப் பாடங்கள் | 129 | 128 |
| 2. | தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை | 142 | 132 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 55,112 | 47,968 |
| 4. | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 37,769 | 45,316 |
| 5. | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 20,613 | 13,555 |
| 6. | தேர்ச்சி சதவீதம் | 54 | 30 |

### 2) அரையாண்டுத் தேர்வுகள்

உதவி ஆட்சியாளர், துணைஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2004 மற்றும் மார்ச் 2005 -ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 46 மற்றும் 32 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2004 மற்றும் பிப்ரவரி 2005-ல் நடத்தியது. அதில் 162 மற்றும் 213 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

# பகுதி - 6

அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 2 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு-1

(அரசாணை 2டி எண் 27, பொதுப் பணி (எஃப் 2) துறை, நாள் 11.06.2003)

திரு. எம்.சந்தானம், உதவிப் பொறியாளர் என்பவர் தகவலின்றி பணிக்கு வராமலிருந்ததற்காக அன்னாரின் மீது அரசால் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை நேர்வில் பிறப்பிக்க வேண்டிய ஆணை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினை 1996-ம் வருடம் கோரியிருந்தது. இந்நேர்வில் திரு. எம். சந்தானம், உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை, திண்டுக்கல் பிரிவு திட்டம் முடிவு பெற்ற காரணத்தால் 30.06.1988 அன்று தலைமைப் பொறியாளர் (பொது) என்பவருக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணியில் சேராமலும் விட்டுவிட்டு விடுப்பு கோரியும், 15.04.1990 வரை விடுப்பை நீட்டித்தும் பிறகு 16.04.1990 முதல் 09.02.1991 வரை விடுப்பு விண்ணப்பம் அளிக்காமலேயே பணிக்கு வராமல் இருந்து விட்டு அதன்பிறகு 10.02.1991 முற்பகல் பணியில் சேர்ந்தார். அதனால் அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17(ஆ)வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அளிக்கப்பட வேண்டிய தண்டனை குறித்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினை கோரியிருந்தது.

தேர்வாணையம் வழக்கினை கவனத்துடனும் விரிவாகவும் ஆராய்ந்து தனது 24.11.1997 நாளிட்ட கடிதத்தில் அன்னாரின் மொத்த அரசுப்பணியை கருத்திற்கொண்டு 10.02.1991 முதல் 6 வருடங்களுக்கு மேலாக அன்னார் தொடர்ச்சியாக பணியாற்றி வருவதையும் கருத்தில் கொண்டு 'பணிநீக்கம்' என்ற தண்டனைக்குப் பதிலாக 'கட்டாய ஓய்வு' என்னும் தண்டனையை வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காமல் அரசு, மீண்டும் 1999-ல் தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினைக் கோரியது. ஆனால் தேர்வாணையம் தனது 24.11.1997 நாளிட்ட கடிதத்தில் கூறப்பட்ட ஆலோசனையையே மீண்டும் வலியுறுத்தியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது. குற்றச்சாட்டு அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.300/- வீதம் 2 ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்வதாக ஆணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு 2</u>

(அரசாணை 3(D) எண் 134, உள் (க.ம) துறை, நாள் 28.12.2004)

உதகை மாவட்டத்தில் உதகை நகர காவல் நிலையத்தில் கே.பெரியமுத்து காவல்துறை ஆய்வாளராகப் பணியாற்றியபோது திரு. பிலிப் என்பவரின் மனைவி திருமதி. கமலாவதி என்பவரின் பூத உடலுடன் நடுவட்டம் என்னும் ஊருக்கு செல்ல 04.02.1992 அன்று இரண்டு காவலர்களை ~~நியமிக்கத் தவறியதாலும் மேலும்~~ குற்றவியல் நடைமுறை சட்ட எண் 174ன்படி வழக்கு பதிவு செய்~~யப்படவில்லை என்பதாலும் மேலும்~~ உயிரிழந்தவரின் பெற்றோர்கள், உடலை வாங்க மறுத்ததை அறிந்ததும் அவ்வுடலை மீண்டும் உதகைக்கே திரும்ப எடுத்து வந்து 05.02.1992 அன்று காலை எட்டு மணிக்கு குற்ற எண் 27/92-ல் குற்றவியல் நடைமுறை சட்ட எண் 306ல் காலதாமதமாக வழக்கை பதிவு செய்ததின் தொடர்ச்சியாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பதாலும், மேல்முறையீட்டாளர் அரசு ஊழியர்களின் நடத்தை விதியில் இருந்து தவறிவிட்டார். அன்னாருக்கு வழங்கப்பட்ட திரண்ட பயனின்றி இரண்டு ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையை எதிர்த்து அவர் அரசுக்கு செய்துக் கொண்ட மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை 2003ஆம் ஆண்டு அரசு கோரியிருந்தது.

தேர்வாணையம் வழக்கினை கவனத்துடனும் விரிவாகவும் ஆராய்ந்து தனது 22.10.2003 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தது. மேல் முறையீட்டாளர் குற்றம் நடந்த அன்று உதகை நகர காவல் நிலையத்தில் இருந்தார் என நிரூபிப்பதற்கு ஆவண ஆதாரங்கள் எதும் இல்லை எனக் கருதி மேல்முறையீட்டை அனுமதிக்கவும் மற்றும் மேற்படி தண்டனையை தள்ளுபடி செய்யவும் அரசுக்கு தனது கருத்தினை தேர்வாணையம் வழங்குகியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது. மேல்முறையீட்டாளர் கடமை தவறியதற்கு போதிய சரியான நிறுவுகைகள் இருப்பதாக குறிப்பிட்டு தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு இரண்டாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையை உறுதி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை அனுமதித்து தண்டனையை ரத்து செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை எற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

## ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் மூன்று வழக்குகளில் செயல்பட்டுள்ளது, இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு - 1

(அரசாணை எண்.98, உள் (காவல்-II) துறை, நாள் 07.02.2002)

நவம்பர் 2001-ல் அரசு திரு. எஸ். மனோகரன் என்பவர் எல்லை பாதுகாப்புபடை பணியில் 17.09.84 அன்று 'உதவி தளவாய்' (Assistant Commandant) ஆக பணி நியமனம் செய்யப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து 22.09.89 முதல் துணை தளவாய்யாக பதவி உயர்வு பெற்றதாகவும் அவர் தேசிய பாதுகாப்புப் படையில் சில காலம் வேற்றுப்பணியில் இருந்ததாகவும் பின்னர் அவர் தமிழ்நாடு சிறப்பு பாதுகாப்புப் படைக்கு வேற்றுப்பணியில் 02.08.93 முதல் அழைக்கப்பட்டதாகவும் பின்னர் காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிக்கான விதிகளை தளர்த்தியும், காவல் துறை துணை கண்காணிப்பாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பயிற்சி மற்றும் தேர்வுகளையும் முடித்து மற்ற காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளருக்கிணையாக தன்னையும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் 19.03.96 முதல் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராக (வகை-1) நிரந்தரமாக பணியமர்த்தப்பட்டார் என்றும் மேற்காணும் தேர்வுகள் மற்றும் பயிற்சியினை முடித்தப்பின்னர் அவர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 1995-96 ஆம் ஆண்டிற்கான காவல் துறை துணை கண்காணிப்பாளர் பட்டியலில் வரிசை எண்.1-ல் உள்ள திரு. ஆர். பெருமாள் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளருக்கு மேலாக வைக்கப்பட்டார் என்றும் தெரிவித்தது. மேலும் அவர் காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் பட்டியலிலும் சேர்க்கப்பட்டு 01.10.2000 முதல் தற்காலிக காவல் துறை கண்காணிப்பாளராக பணிநிலைப்பிரிவு அல்லாத (Non-Cadre) பதவி உயர்வு செய்யப்பட்டதாகவும் அவரது பெயரினை 2001 ஆம் ஆண்டிற்கான இந்திய காவல் பணியில் சேர்ப்பது குறித்து பரிசீலனை செய்யப்படுவதாகவும் அதற்கு அவரது பெயரை காவல் துறை துணை கண்காணிப்பாளர் பதவியில் (மாநில காவல் பணி) பணியமர்த்தப்பட்டதாக கருதப்படக்கூடிய நாள் (Deemed date of appointment) ஒன்று அவசியம் என்றும் அதன் பொருட்டு அன்னார் 07.11.84 முதல் மாநில காவல் பணியில், காவல் துறை துணை கண்காணிப்பாளர் பதவியில் பணியமாத்தப்பட்டதாக கருதலாம் என்று அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிவித்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது.

அரசின் கருத்துருவினை கூர்ந்தாய்வு செய்த தேர்வாணையம் கீழ்க்காணும் காரணங்களுக்காக தனது இசைவினை அளிக்க மறுத்தது :-

அ) அலுவலர் திரு. எஸ். மனோகரன் அவர்கள் தேர்வாணையத்தின் நேரடி தெரிவின் மூலமாகவோ அல்லது துறைபதவி உயர்வுக்குழு பணிமாறுதல் மூலமாகவோ காவல் துறை துணை கண்காணிப்பாளராக தெரிவு செய்யப்படவில்லை.

ஆ) காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் பதவியினை அன்னாருக்கு வழங்கும்போதும் தமிழ்நாடு காவல் பணி விதி 2 மற்றும் 4 (உ) ஆகியவற்றினை தளர்வு செய்யும் போதும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கவில்லை.

இ) பணியில் அமர்த்தப்பட்டதாக கருதுவதற்கு (Deemed appointment) வழிவகைகள் ஏதும் விதிமுறைகளில் இல்லை.

இருப்பினும் எல்லை பாதுகாப்பு பணி, மாநில காவல் துறை பணியினை விட தாழ்வானது இல்லை என அரசு கருதுவதாவும் எனவே தனியாளர் எல்லை பாதுகாப்பு பணியில் பணிபுரிந்த பணியினை தமிழ்நாடு காவல் பணிக்கு சமமாக கருதுவதாகவும் தெரிவித்து தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அவர் 07.11.84 முதல் காவல் துறை துணை கண்காணிப்பாளர் பதவியில் மாநில காவல் பணியில் பணியமர்த்தப்பட்டதாக கருதப்படுவதாக தெரிவித்து அரசு ஆணை வெளியிட்டது.

அரசு இவ்வாறாக இந்நேர்வில் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணை வெளியிட்டுள்ளது.

<u>வழக்கு - 2.</u>

1. அரசாணை (பல்வகை) எண். 191, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம். இ1), நாள் 11.08.99.
2. அரசாணை (பல்வகை) எண்.220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1), நாள் 28.09.99.
3. அரசாணை (பல்வகை) எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1), நாள் 03.05.2002.

அரசுக்கடிதங்கள் எண். 55848/இ1/86-14, நாள் 18.04.88 மற்றும் 46270எ/எம்.இ1/93-3, நாள் 19.02.1998-ல் அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணி சிறப்பு விதிகளில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கூடுதல் நேர்முக உதவியாளர் பதவியை சேர்க்கும் பொருட்டு வரைவுத் திருத்தங்களை தேர்வாணயத்திற்கு அனுப்பி கருத்தினைக் கோரியது. கடிதங்கள் எண்.3495/ஆ4/88, நாள் 05.09.88 மற்றும் 5560/வி.அ.து.-ஆ3/96, நாள் 10.07.98-ல் மேற்குறித்த வரைவுத் திருத்தங்கள் மீது தேர்வாணையம் தனது கருத்துக்களை வழங்கியது. ஆனால், அரசாணை எண்.191, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.08.99-ல் முன்னர் நடைமுறையில் இருந்த தமிழ்நாடு நகராட்சி ஆணையர் சிறப்பு விதிகளுக்குப் பதிலாக தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணிக்கான திருத்திய சிறப்பு விதிகளை நேரிடையாக அரசு வெளியிட்டது. அவ்விதிகளில் நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் பதவிக்கான வரைவு விதிகளின் மீது தேர்வாணையத்தின் கருத்துக்களைப் பெறாமல் நேரிடையாக புதியதாக மேற்குறிப்பிட்ட பதவி மற்றும் அதற்குரிய விதிகள் சேர்க்கப்பட்டது. திருத்திய சிறப்பு விதிகள் அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் அதாவது 11.08.99 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. அரசாணை எண். 220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1), நாள் 28.09.99-ல் மேற்படி பணியில் சேர்க்கப்பட்ட பதவிகளுக்குரிய விதிகள் நடைமுறைக்கு வரும் நாள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டன :-

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கூடுதல் நேர்முக உதவியாளர் - 18.02.85
2. நகராட்சி ஆணையர், நிலை- 1 - 15.03.93
3. பிற பதவிகள் - 11.08.99

மேற்காணும் அரசாணையும் தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்காமல் வெளியிடப்பட்டது.

அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1), நாள் 03.05.2002-ல் நகராட்சி ஆணையர், நிலை-1 பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நியமன முறை விதி, விதித்திருத்தத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டு, அத்திருத்தம் 03.05.2002 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்கண்ட மூன்று அரசாணைகளும், தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்காமல் அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணியில் சேர்க்கப்பட்ட பதவிகளுக்கு அரசாணை எண்.191, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.08.99-ல் திருத்திய சிறப்பு விதிகள் வெளியிடப்பட்டு, அப்பதவிகள் தமிழ்நாடு மாநிலப் பணியில் சேர்க்கப்பட்டுள்ளதால், அப்பதவிகள் தானாகவே, தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்கு உட்பட்டவையாகும். தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணியில் ஒரு புதிய பதவியை அதாவது நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் பதவியை உள்ளடக்கியும் மற்றும் பிற விதித்திருத்தங்களையும் தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்காமல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

அரசின் அலுவல் சாரா குறிப்பு எண்.4020/54-2, பொதுத் (பணிகள்)துறை, நாள் 11.09.54 மற்றும் அரசுக் கடித எண். 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (பணி-எம்) துறை, நாள் 25.09.89-ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் இருக்கும் பதவிகளின் நியமன முறை அல்லது நியமன முறையை பாதிக்கக்கூடிய கொள்கை முடிவுகளை அரசு எடுக்கும் முன்னர் தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி, விதிகளை உருவாக்கும் பொழுதோ அல்லது விதித்திருத்தங்கள் வெளியிடப்படும் பொழுதோ தேர்வாணையத்தை கலந்தாலோசித்தல் போதுமானதன்று. அரசு, கடித எண்.42809/ந.ப.1/2002-1, நாள் 17.12.2002-ல் அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நாள் 03.05.2002-ல் வெளியிடப்பட்ட விதித்திருத்தம், முன்னர் நடைமுறையிலிருந்த தமிழ்நாடு நகராட்சி நிர்வாகப் பணி சிறப்பு விதிகளின்படி நகராட்சி ஆணையர் நிலை-1 பதவியில் நியமிக்கப்பட, நகராட்சி ஆணையர், நிலை-II பதவியில் இரண்டு வருடங்கள் பயிற்சியினை முடித்த ஆறு நபர்களின் பணிநலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு சட்டத்துறையின் இசைவினைப் பெற்று வெளியிடப்பட்டது என்று அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தெரிவித்ததோடு, தேர்வாணையம், இந் நிகழ்வில் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை, கவனக்குறைவினால் விடுபட்டுவிட்டது என்று அரச தெரிவித்து மேற்படி விதித்திருத்தத்திற்கு (அரசாணை எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.05.2002) தேர்வாணையத்தின் பின்னேற்பு இசைவினை வழங்குமாறு அரசு கோரியது.

இவ்வாறு. இந்நிகழ்வில் அரசினால் வெளியிடப்பட்ட அலுவல் சாரா குறிப்பு மற்றும் கடிதத்தில் வெளியிடப்பட்ட நெறிமுறைகளை, அரசே பின்பற்றவில்லை.

<u>வழக்கு -3</u>

( அரசாணை எண் 73, தொழில் துறை, நாள் 03.09.2002)

அரசு, அரசாணை எண் 73, தொழில் துறை, நாள் 03.09.2002ல் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கத் துறை சார்நிலைப் பணியில், புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் உதவிப் பொறியாளர் (Drilling- துளையிடுதல்) பதவிக்கு தனியாக தற்காலிக விதிகளை ஏற்கனவே அரசாணை எண் 774, தொழில் துறை, நாள் 31.10.1989ல் வெளியிட்டதற்கு பதிலிட்டகற்றீடாக வெளியிட்டது. அரசாணை எண் 774, தொழில் துறை நாள் 31.10.1989ல் மேற்படி பதவிக்கு தற்காலிக விதிகள் தேர்வாணையத்தினை கலந்தாய்வு செய்த பிறகே வெளியிடப்பட்டன என்பதால் மேற்படி பதவிக்கான திருந்திய தற்காலிக விதிகளை முந்தைய அரசாணைக்கு பதிலிட்டகற்றீடாக வெளியிடுவதற்கு முன்பாக தேர்வாணையத்தினை கலந்தாலோசித்தே

வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசு மேற்படி பதவிக்கான தற்காலிக விதிகளைத் தேர்வாணையத்தை கலந்தலோசிக்காமலேயே வெளியிட்டது.

அரசு பொதுத் (பணியாளர்-எம்) துறை அலுவல் சாரா குறிப்பு எண் 4020/54-2 நாள் 11.09.1954 மற்றும் அரசு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்-எம்) துறை கடித எண் 63278/89-3 நாள் 25.09.1989-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி நியமன முறைகளை பாதிக்கக் கூடிய முடிவுகளை எடுக்கும் முன்னரோ அல்லது நியமனங்களை மேற்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய கொள்கை முடிவு எடுக்கும் முன்னரோ தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி விதிகளை உருவாக்கும் பொழுதோ/விதித்திருத்தங்கள் வெளியிடும் பொழுதோ கலந்தாலோசித்தல் போதுமானதன்று. எனவே அரசாணை எண் 73, தொழில்கள் துறை, நாள் 03.09.2002ல் மேற்படி திருந்திய தற்காலிக விதிகள் வெளியிடப்படும் முன்னர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாததற்கான காரணத்தை தெரிவிக்குமாறு அரசிடம் கோரப்பட்டது. அரசு இதற்கு மறுமொழியாக தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கத் துறை சார்நிலைப் பணியில் உதவிப் பொறியாளர் (Drilling-துளையிடுதல்) பதவிக்கான தற்காலிக விதிகளை தலைமைச் செயலக ஆலோசனைத்துறை/ சட்டத்துறைஆகியவைகளை கலந்தாலோசித்தே வெளியிடப்பட்டது என்பதால் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கவில்லை எனத் தெரிவித்தது. அரசு பொதுத் (பணிகள்) துறை அலுவல் சாரா குறிப்பு எண் 4020/54-2 நாள் 11.09.1954 மற்றும் அரசுப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்-எம்) துறை, கடித எண் 63278/89-3 நாள் 25.09.1989ல் அரசு வெளியிட்டுள்ள அறிவுரைகளை அரசே பின்பற்றவில்லை.

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து, ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு -12ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்புரை:-

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும் மற்றும் துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. பா.ர. சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்., | உறுப்பினர் |
| திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்., | உறுப்பினர் |
| திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி., | உறுப்பினர் |
| டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., | உறுப்பினர் |

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம். சென்னை-2.

சந்தியா வேணுகோபால்- சர்மா, இ.ஆ.ப.,
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்
மற்றும் செயலாளர் (பொறுப்பு)

நாள் : 19.08.2005.

## பின் இணைப்பு - 1

31.3.2005 - இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | துணைச் செயலாளர் | 4 |
| 2. | சார் செயலாளர் | 20 |
| 3. | கணக்கு அலுவலர் | 1 |
| 4. | உதவி கணக்குஅலுவலர் | 1 |
| 5. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 6. | நூலகர் | 1 |
| 7. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 8. | பிரிவு அலுவலர் | 72 |
| 9. | நேர்முக செயலாளர் | 1 |
| 10. | உள்ளீடு விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 11. | உள்ளீடு விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 12. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 13. | உதவி பிரிவுஅலுவலர் மற்றும் கணக்கர் | 194 |
| 14. | நேர்முக உதவியாளர் | 7 |
| 15. | நேர்முக எழுத்தர் | 4 |
| 16. | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 17. | உதவியாளர் | 99 |
| 18. | தட்டச்சர் | 39 |
| 19. | ஊர்தி ஓட்டுநர் | 9 |
| 20. | பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர் | 23 |
| 21. | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 22. | முதன்மை ஏவலர் | 1 |
| 23. | அலுவலக உதவியாளர் | 69 |
| 24. | காவலர் | 6 |
| 25. | பெருக்குபவர் | 4 |
| 26. | துப்புரவுப்பணியாளர் | 3 |
| 27. | குடிநீர் வைப்பவர் | 1 |

# பின் இணைப்பு - II

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் - 2004-2005 ஆம் ஆண்டு

